©
GOVERNMENT OF TAMIL NADU
2020

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 152.00 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 196] CHENNAI, FRIDAY, MAY 15, 2020
Vaikasi 2, Saarvari, Thiruvalluvar Aandu–2051

## Part II—Section 2

**Notifications or Orders of interest to a Section of the public issued by Secretariat Departments.**

### NOTIFICATIONS BY GOVERNMENT

**பொதுப்பணித் துறை**

**நிலங்களை கையகப்படுத்துதல் பற்றிய அறிவிக்கைகள்**

*[அரசாணை (நிலை) எண். 116, பொதுப்பணி (ப்பி 2)த் துறை, 4 மே 2020, சித்திரை 21, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு-2051.]*

**படிவம்** - **IV**

(13(1) ஆம் விதியைக் காண்க)

**முதல்நிலை அறிவிக்கை**

**No.II(2)/PWD/348(b-1)/2020**

திருநெல்வேலி மாவட்டத்தின் நான்குநேரி வட்டத்தை சேர்ந்த மூலைக்கரைப்பட்டி கிராமத்தில் மொத்தம் **42.83.65** ஹெக்டேர் நிலம் தாமிரபரணி **–** கருமேனியாறு **–** நம்பியாறு நதிகள் இணைப்புத்திட்டத்திற்காக வெள்ளநீர்க்கால்வாய் எனப்படும் பொதுநலப்பயன்பாட்டிற்காகத் தேவைப்படுவதாக உரிய அரசு உத்தேசித்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தாமிரபரணி, கருமேனியாறு மற்றும் நம்பியாறு நதிகளை இணைத்து கன்னடியன் கால்வாயிலிருந்து உபரி நீரை சாத்தான்குளம் மற்றும் திசையன்விளை ஆகிய வறட்சி பகுதிகளுக்கு வெள்ளநீர் கால்வாய் அமைக்க நிலம் உபயோகப்படுத்தப்படுவதால் நீர்ப்பாசனத்திட்டத்திற்கான சுற்றுச்சூழல் மதிப்பீட்டாய்வு WAPCOS நிறுவனத்தால் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் **1986**, பிரிவு **3(3)**ன் படி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலங்கள் வெள்ளநீர்க் கால்வாய் நீர்ப்பாசனத்திட்டம் அமைப்பதற்காக மட்டும் கையகம் செய்யப்படுகிறது. இத்திட்டத்திற்காக சுற்றுச்சூழல் மதிப்பீட்டாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதால் **2013** ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதலில் நியாயமான சரியீடு பெறுவதற்கும் மற்றும் ஒளிவு மறைவின்மைக்கும் மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்விற்கான உரிமைச் சட்டத்தின் பிரிவு **6(2)–**ன் படி சமூக தாக்க மதிப்பீட்டாய்வு மேற்கொள்ள வேண்டியதில்லை . பிரஸ்தாப நிலங்களில் **25.02.2019, 06.03.2019, 20.03.2019, 03.06.2019, 20.07.2019** மற்றும் **06.08.2019** அன்று கேட்பு துறையினரால் முன்நுழைவு செய்யப்பட்டு கால்வாய் தோண்டப்பட்டுவிட்டது. இத்திட்டத்திற்காக நிலங்கள் கையகப்படுத்தப்படுவதன் காரணமாக குடும்பங்கள் ஏதும் இடமாற்றம் செய்யப்படவில்லை. மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்வு வழங்குவதற்காக சேரன்மகாதேவி சார் ஆட்சியர் நிர்வாகியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார் . எனவே திருநெல்வேலி மாவட்டத்தின் நான்குநேரி வட்டத்தைச் சேர்ந்த மூலைக்கரைப்பட்டி பகுதி **1** கிராமத்தில் மேற்சொன்ன திட்டத்திற்காக மொத்த விஸ்தீரணம் **42.83.65** ஹெக்டேர் பரப்பளவு கொண்ட நிலப்பகுதி கையகப்படுத்தப்படவுள்ளது என அறிவிக்கப்படுகிறது. அதன் விரிவான விவரங்கள் பின்வருகின்றன.



Verified RealEstate™